பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் சிறந்த சாத்தியமான உதாரணத்தை இந்தியா இன்றைய தினம் கொண்டுள்ளது. இந்தியாவில் கூட்டாட்சியின் தாக்கத்தை பிரதமர் நன்கு உணர்ந்துள்ளார். ஆட்சி அதிகாரத்திலும், மாநிலங்கள் தங்களால் இயன்ற அளவுக்கு செயல்பட அனுமதிப்பதிலும் அவர் நம்பிக்கை கொண்டுள்ளார். பெருமிதம் கொண்ட மற்றும் நம்பிக்கை கொண்ட நாட்டை உருவாக்குவதில் இந்தியாவின் பகுதியாக அனைத்து மாநிலங்களும் விளங்குகின்றன என அவர் தனது வாய்பட கூறியுள்ளார். இத்தகைய வழியை காட்டும் தலைவர் இருக்கையில், வாழ்வின் இதர துறைகளிலும் கூட்டாட்சி தத்துவம் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு தோன்றலாம். ஆனால்இது இல்லாமல் இருப்பது வருத்தத்திற்குரியதாகும்.

ஆனால் ஸ்ரீநிவாசன் தலைமையிலான பிசிசிஐ நிர்வாகிகள் இந்த உதாரணத்தை பின்பற்றாமல், இந்திய கிரிக்கெட்டில் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக செயல்பட முயற்சிக்கின்றனர். அனைத்து வயது பிரிவுகளிலும் உள்நாட்டுப் போட்டிகளில் இருந்து ராஜஸ்தானை வெளியேற்றுவது அவர்களது திட்டமாக உள்ளது என்று வெளியாகியுள்ள செய்தி சமீபத்திய உதாரணமாகும். மிக சமீபத்தில் இரண்டு முறை ரஞ்சி சாம்பியன் பட்டம் வென்ற ராஜஸ்தான், முன்னணி போட்டிகளில் இடம் பெற முடியாமல் போகும். ஏன்? மாநில கிரிக்கெட் சங்கம் ஒன்று முறையை தேர்தல் நடைமுறையைக் கொண்டு நிர்வாகிகளை தேர்வு செய்யும் முறை வைத்திருப்பது அவர்களுக்கு பிடிக்கவில்லை. இதுதான் ஸ்ரீநிவாசன் தலைமையில் உள்ளவர்களிடையே இருக்கும் அச்சமாகும் என்பதால் அவர்கள் ராஜஸ்தான் அணியை அனைத்து வயது குழு போட்டிகளில் இருந்தும் விலக்கி வைக்கும் அளவுக்கு சென்றிருக்கிறார்கள். அவர்கள் பிரதமரைப் பார்த்து அவரிடம் இருந்து ஏதாவது கற்றுக் கொள்ள வேண்டும் என்பதே என் விருப்பமாகும்.

அனைத்து 28 மாநிலங்கள் மற்றும் ஆறு யூனியன் பிரதேசங்களிலுமட் பிஜேபி ஆட்சியில் இல்லை. ஆனால் பிஜேபி ஆட்சி செய்யாத மாநிலங்களை பிரதமர் புறக்கணிப்பதாக அர்த்தம் இல்லை. அவர் நாட்டின் பிரதம மந்திரியாக இருக்கும் போது இந்தியா முழுமைக்கும் அவர் அந்தப் பொறுப்பில் உள்ளார். பொறுப்பு கிடைக்கும்போது நீங்கள் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளக்கூடாது. ஆனால் திரு. ஸ்ரீநிவாசன் அப்படி சிந்திப்பதில்லை. ஸ்ரீனிவாசன் எதிர்வரிசையில் இருக்கும் அனைவரையும் தனது உண்மையான எதிரிகளாக கருதுகிறார். இந்தியாவை சிறந்த கிரிக்கெட் நாடக ஆக்குவதற்கு அனைவருடனும் இணைந்து குழுவாக செயல்பட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. நாம் இணைந்து செயல்பட்டால் நாம் வெல்லமுடியாத சக்தியாக திகழ முடியும். ஆனால் நாம் பிரிந்து இருக்கிறோம் என்பதாலல் பல்வேறு மட்டங்களில் நாம் நிச்சயம் தோல்வி அடைவோம்.

ராஜஸ்தானின் தற்போதைய பெருமிதமாக கருதப்படும் பங்கஜ் சிங்கை இங்கிலாந்து தொடருக்கான டெஸ்ட் பந்துவீச்சாளராக பிசிசிஐ தேர்வுக்குழு தேர்வு செய்திருக்கலாம். ஆனால் ராஜஸ்தானின் இதர திறன் பெற்ற வீரர்கள் இதே போன்ற வாய்ப்பை உயர் மட்டங்களில் பெறவில்லை. ரஞ்சி போட்டியில் ரன்கள் குவித்த ராபின் பிஸ்ட் உள்ளார். ஆனால் அவர் தேர்வு செய்யப்படவில்லை. ராஜஸ்தானில் இது போன்ற நாட்டின் சிறந்த திறனாளிகள் உள்ளனர். ஆனால் வாய்ப்பு கிடைக்காமல் திறனைக் கொண்டு எதுவும் இல்லை.

மாநில கிரிக்கெட் சங்கங்கள் மீதான் திரு. ஸ்ரீநிவாசனின் வெறுப்புக்கு ராஜஸ்தான் ஒரு உதாரணமாகும். வாங்கடே மைதானம் டிவி தயாரிப்புக்கு ஏற்றதாக இல்லை என்று சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது. உலகக் கோப்பை 2011 இறுதிப்போட்டி, உலகக் கோப்பை 1987 அரையிறுதி மற்றும் உலகக் கோப்பை 1996 போட்டிகள் இன்னும் இதர முக்கியமான போட்டிகளை நடத்திய மைதானம் இன்று திடீரென சரியில்லாத இடமாகிவிட்டது. நீங்கள் புத்திகூர்மை உடையவராக இருந்தால் தயவுசெய்து வரிகளுக்கு இடையே படிக்கவும். திரு. சரத் பவார் என்று தலைவர் அதிகம் இருப்பவர்களுடன் சரியாக இல்லை.

பீகார் மாநிலத்தைப் பாருங்கள். திரு. ஸ்ரீநிவாசனின் தவறான நிர்வாகத்திற்கு இன்னொரு உதாரணமாக திகழ்கிறது. ஒரு முறை ரஞ்சி போட்டியில் பங்கேற்ற இந்த முழு உறுப்பினர் மாநிலம், மீண்டும் இணைவதற்காக போராடி வருகிறது. ஏன்? பீகார் மாநிலம் இரண்டாக பிரிக்கப்பட்டு ஜார்க்கண்ட் மாநிலம் உருவாக்கப்பட்டபோது பீகார் புறக்கணிக்கப்பட்டது. ஜார்கண்ட் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் பீகார் அனுமதிக்கப்படவில்லை. இன்றைய 'னம் இதனால் பீகார் போதிய முடிவெடுக்கும் சக்தியில்லாத ஸ்ரீனிவாசனால் பீகார் பாதிக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் நம்மிடம் ஆதித்ய வர்மா போன்ற சிறந்த நிர்வாகி இருந்தாலும் அவரது பீகார் மாநிலம் ஸ்ரீநிவாசன் மற்றும் அவரது சகாக்களின் ஆதரவை பெறவில்லை.

இந்தப் போக்கு தொடர்ந்தால் நாம் பெரிய அளவிலான அதிக எண்ணிக்கையிலான திறன்களை இழக்க நேரிடும். அவரது செயல்பாடுகளை நாம் தொடர்ந்து அனுமதித்தால் நாம் பெரிய கிரிக்கெட் சக்தியாக முடியாது. இந்த விளையாட்டின் காரணமாகத் தான் நான் இருக்கிறேன் என்பதை திரு. ஸ்ரீநிவாசன் உணர்ந்து கொணள்ள வேண்டும்.

நாம் பிரதமர் மன்மோகன் சிங்கை போன்று டீம் இந்தியாவை உருவாக்கவே ஒன்றாக இருக்கிறேம். நாம் ஒன்றுபட்டிருக்க மறந்தால் நாம் இங்கிலாந்தில் ஏற்பட்டது போன்ற சரிவை சந்திக்க நேரிடும். ஆனால் இதை யாராவது கவனிக்கிறார்களா?

பெரியதாக சிந்திக்கவும். எப்போதும்.